පාර්ලිමේන්තු ප්‍රකාශණ මාලා අංක : 318

ආයතනයේ නම : ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 318**
**நிறுவனத்தின் பெயர்: இலங்கைப் பாராளுமன்றம்**

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளையும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.

Parliament Series No.: 318
Name of the Institution: Parliament of Sri Lanka

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் பிரகாரம், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்குரியதாக, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் அவதானிப்புகளையும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் சமர்ப்பித்தல்.**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 318**

**இலங்கைப் பாராளுமன்றம்**

| குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் | அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய முன்னேற்றம் |
|---|---|
| வெளிநாட்டுப் பணவனுப்பல்களின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தினால் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக 2022 மே 01ஆம் திகதி முதல் 2023 செப்டம்பர் 15ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் குறித்து அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர், பாராளுமன்ற தீர்மானமொன்றின் ஊடாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் பொருட்டு அதனை சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | (1) பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையாக, இக்குழு அறிக்கை 2025 ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>(2) அதனைத் தொடர்ந்து, அக்குழு அறிக்கையானது பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடுகளுக்கமைய, அவதானிப்புகளுக்காக நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் 2025 நவம்பர் 17ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டது.<br><br>(3) 2026 மார்ச் 04ஆம் திகதியளவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரின் அவதானிப்புகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகளும் சபை முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதேவேளை, இதுவரை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ள தொழில் அமைச்சு மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கு அரசாங்கக் |

| | |
|---|---|
| | கணக்குகள் பற்றிய குழுவினால் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.<br><br>(4) மேற்கூறப்பட்ட நினைவூட்டல் கடிதங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளிலிருந்து அறிக்கைகள் எதிர்காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அவற்றை ஆராய்வதற்காக மீண்டும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிடம் ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>(5) அதன்போது, குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்த பின்னர், எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்கள் எட்டப்பட்டு, அத்தீர்மானங்களின் அடிப்படையில் குழுவினால் தயாரிக்கப்பட்ட குழுவின் விதப்புரைகள் ஒரு பிரேரணை வடிவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.<br><br>(6) அதனைத் தொடர்ந்து, அக்குழு அறிக்கை சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அதனை சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென பாராளுமன்றத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்படுமாயின், அந்த அறிக்கையை சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்